பட்ட - மலைவாழ் மக்கள், ஒடுக்கப்பட்ட மக்கள், பெண்கள் மற்றும் பிற சிறுபான்மையினருக்கும் எதிராக - உழைக்கும் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் இத்தகைய அட்டூழிங்கள் இந்த நாட்டில் நிலப்பிரபுத்துவ சாதி - மதக் கொடுங்கோன்மை இன்னமும் வலுவாக நீடிப்பதையே காட்டுகின்றன. நிலப்பிரபுத்துவ கலாச்சாரம், அதன் மிச்ச சொச்சங்களாக நீடிப்பதாகக் கூறுவதைக் கூட ஏற்க முடியாது. அதன் பொருளாதார, சமூக, அரசியல் ஆதிக்கமாகவே நீடிக்கிறது. அதோடு நவீன அரசு எந்திரத்தின் பலத்தையும் பெற்றிருக்கிறது.

சுருக்கமாகச் சொன்னால் எதிரிகள் ஆயுதமேந்தி இருக்கிறார்கள். ஆயுத மேந்திய குண்டர்களையும், அரசுப் படைகளையும் பெற்றிக்கிறார்கள். அதனால் அரசியல் அதிகாரத்தையும் பெற்றிருக்கிறார்கள். இட ஒதுக்கீடு போன்ற சலுகைகளைப் பெற்றுப் பொருளாதார ரீதியில் முன்னேறி விடுவதாலேயே சமூக உரிமையும், அரசியல் சுதந்திரமும் தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களுக்கு வந்து விடாது. உரிமையையும் மானத்தையும் பறிகொடுத்து அடிமைகளாய் வயிற்றை நிரப்பிக் கொண்டு வாழ்வது மனித வாழ்வல்ல. போலீசுகாரரானாலும் அம்பதாஸ் சவானேக்கு என்ன நேர்ந்தது. சமூக நீதி - சமூக உரிமை - சமூக சமத்துவத்தைப் பெற முடியவில்லை. ஓரளவு வசதி வந்தும் சுண்டூர் தாழ்த்தப்பட்ட மக்கள் சுதந்திரமாக வாழமுடியவில்லை. சுண்டூரில் தாழ்த்தப்பட்ட சகோதரர்களைப் பிரேதப் பரிசோதனை செய்த மருத்துவர் ரவிச்சந்தர் குமார் அந்தக் கோரம் - கொடுமை தாங்காது நெஞ்சம் துடிதுடிக்கக் தற்கொலை செய்து கொண்டார். அதுவும் ஒருவகை எதிர்ப்பு, ஆற்றாமையின் வெளிப்பாடு; கோழைத்தனமல்ல. மந்திரிகளையும் துரோகத் தலைவர்களையும் கற்களையும் செருப்பையும் வீசி விரட்டினார்களே சுண்டூர் கிராம தாழ்த்தப்பட்ட இளைஞர்கள், அது இன்னொரு எதிர்ப்பு. முத்தம்மாவை இழிவுபடுத்திய ரெட்டி நிலப்பிரபுவை அடித்தே கொன்றார்களே சிலகுர்த்தி ஒடுக்கப்பட்ட மக்கள், அது மேலும் ஒரு எதிர்ப்பு.

ஆகவே ஒரு நாள் வாழ்ந்தாலும் மானமுள்ள, உரிமையுள்ள போராளியாக, தியாகியாக வாழவேண்டும். எதிரிகளிடம் இருந்து ஆயுதங்களையும் அரசியல் அதிகாரத்தையும் பறித்தெடுக்க வேண்டும். இது ஒன்றுதான் தாழ்த்தப்பட்ட - ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான பாதை! ●

# தமிழருக்கு எதிராக பார்ப்பன - பாசிச ஜெயாவின் போர்

*ஈழ அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்து அவர்களின் நலன்கள் - உரிமைக்காகக் குரல் கொடுப்பதும், ஈழப் போராளிகளை இழிவுபடுத்துவதை எதிர்ப்பதும், ஈழ விடுதலையை ஆதரிப்பதும் கூட இந்திய தேச விரோதச் செயல்; அதற்காக மாநாடு, பொதுக்கூட்டங்கள் ஏற்பாடு செய்வதும், பங்கேற்பதும் சுவரொட்டிகள், துண்டறிக்கைகள் போடுவதும் கூட தேசவிரோதச் செயல்கள் - என்று குற்றஞ்சாட்டி தேசியப் பாதுகாப்புச் சட்டம், தேசத் துரோகச் சட்டம் ஆகியவற்றின் கீழ் சிறையில் அடைக்கப்படுகிறார்கள். பத்திரிக்கையாளர்கள் கூட்டம் கூட தடை செய்யப்படுகிறது.*

*எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் தாக்கி வெளியேற்றப்படுகின்றனர். போராட்டங்களினால் பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்பட்டால் கட்சித் தலைமையிடமிருந்து நட்டஈடு வசூல் செய்யப்படும் என்று மிரட்டுகிறார்கள். ஜனநாயக முறையில் சாதாரணக் கோரிக்கைக்குப் போராடும் மாணவர்கள் தாக்கப்படுவதோடு, மாணவ சமுதாயத்தையே ஒடுக்குவதாக மிரட்டுகிறார்கள். ஒருபுறம் விலைவாசி - கட்டணங்களை ஏற்றி பொருளாதாரத் தாக்குதல் தொடுப்பதோடு, மறுபுறம் பார்ப்பனர் நலன்களுக்காகக் கட்டாயமாக கோவில் நிதி வசூலிக்கிறார்கள். அம்பேத்கார் சிலை திறக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துகிறார்கள்.*

*இவையெல்லாம் இது பார்ப்பன - பாசிச கும்பலின் ஆட்சியே என்பதை நிரூபிக்கின்றன.*

*இதற்கும் மேலாக, விரைவில் மத்திய உள்துறை மந்திரி சவாண் ஜெயலலிதாவைச் சந்திக்கவிருக்கிறார். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத அமைப்பென்று பிரகடனப்படுத்தித் தடைசெய்வது என்று அவர்கள் முடிவு செய்யப் போகிறார்கள். அப்புறம் புலிகள் அமைப்போடு தொடர்புடையவர்கள் மட்டுமல்ல, ஈழ ஆதரவாளர்கள், தமிழன உணர்வுடையவர்கள், ஜனநாயக உரிமை கோருபவர்கள் ஆகிய அனைவர் மீதும் பயங்கரவாதத் தடைச் சட்டம் பாயும். ராஜஸ்தானிலும் குஜராத்திலும் 11 வயது சிறுவர்கள் முதல் 75 வயது வயோதிகர் வரை, குறிப்பாக முஸ்லீம் ஆண்களும் பெண்களுமாக அப்பாவிகள் ஆயிரக்கணக்கில் இச்சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். விசாரணையின்றி நீண்டகாலம் சிறையிலடைக்கும் இக்கொடிய கருப்புச் சட்டம் இனித் தமிழக மக்கள் மீதும் பாயும். மொத்தத்தில் பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் தமிழக மக்களுக்கு எதிராக அரசு பயங்கரவாதப் போர்ப் பிரகடனம் செய்திருக்கிறது.*

ஈழத் தமிழர்களுக்கு எதிராக மத்திய அரசு - சி.பி.ஐ. கூட்டோடு பார்ப்பன - பாசிச ஜெயலலிதா ஏவி விட்டிருக்கும் அரசு பயங்கரவாத அடக்குமுறை நடவடிக்கைகள் இன உணர்வும் ஜனநாயக உரிமை உணர்வும் உடைய தமிழர்களிடையே நியாயமான, அவசியமான கோபாவேசத்தைத் தூண்டியிருக்கின்றன.

ஏற்கனவே ஈழ விடுதலையையும், ஈழ அகதிகள் - போராளிகளையும் ஆதரித்து அனுதாபம் காட்டி வந்த அமைப்புகள் பலவும் ராஜீவ் கொலையையும் சி.பி.ஐ. உளவுப்படையின் தலைமையில் கட்டவிழ்த்து விடப்பட்ட மனித வேட்டையையும் தொடர்ந்து அஞ்சி ஒடுங்கிப் போயிருந்தன. ஓரிரு குரல்கள் மட்டுமே ஒலித்துக் கொண்டிருக்க, அவற்றின் குரல் வளையையும் நெறிக்கும் முயற்சியில் சி.பி.ஐ.யும், ''கியூ'' போலீசுப் படையும் இறங்கின.

சிவராசன், சுபா ஆகியோர் சுற்றி வளைக்கப்பட்டு தற்கொலை செய்து கொண்டபின் ஈழ ஆதரவு இயக்கங்களின் மீதான ஒடுக்குமுறைக் கெடுபிடி கைவிடப்பட விட்டாலும், தளர்த்தப்படும் என்று நம்பிக்கை துளிர்விட ஒரு சில அமைப்புகள் வெளிவந்தன. பொதுக்கூட்ட, மாநாடு அறி

விப்புகள் செய்த அவர்களும் கைது செய்யப்பட்டனர். சி.பி.ஐ - ''கியூ'' போலீசின் கவனத்திலிருந்து தப்பிய ஓரிரு கூட்டங்களே நடந்தன.

அதற்குள் ராஜீவ் - ஜெயாவின் அடிவருடிகளான அ.தி.மு.க - காங்கிரசு துரோகிகளுக்கு எஜமான விசுவாசம் பொத்துக் கொண்டு வந்துவிட்டது. இதற்கு அடிபோட்டுக் கொடுத்தன தினமலர், இந்து ஆகிய இரு பார்ப்பன நாளேடுகள். விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் புகழ்ந்தும், புலிகள் ஒழிப்பு நடவடிக்கைகளை சிறுமைப்படுத்தியும் தமிழின வெறி, பிரிவினை - பிளவுவாத அமைப்புகள் பிரச்சாரம் துவங்கியிருப்பதாக அந்த நாளேடுகள் புளுகின. புலிகளின் நிதி உதவியும் தூண்டுதலும் பெற்று 'இந்திய அமைதி'ப்படையின் அட்டூழியங்களை பெருக்கிச் சொல்லியும், தமிழ்ப் பண்பாடு, மொழி, இன மேன்மைக்காக புலிகள் தியாகம் புரிவதாகப் புகழ்ந்தும் பிரச்சாரம் நடப்பதாக அவதூறு எழுதின. ராஜீவ் கொலையில் புலிகளுக்கு எதிராக அசைக்க முடியாத ஆதாரங்களுடன் வழக்குத் தொடுக்க இருக்கும்போது அதைத் திசைத் திருப்பவே இந்த பிரச்சாரம் திட்டமிட்டு நடத்தப்படுவதாக சி.பி.ஐ. கருதுகின்றது என எழுதின.

சட்டமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் தன்னை எதிர்ப்பவர்கள் யாரும் இல்லாதவாறு தனிக்காட்டு ராணியாக ஆட்சி நடத்த எண்ணி எதிர்தரப்பினர் மீது திட்டமிட்ட தாக்குதல் - ஒடுக்குமுறையை ஏவி யுள்ளார் பார்ப்பன - பாசிச ஜெயலலிதா. அதேபோல ராஜீவ் கொலை வழக்கில் எதிர்த்து வழக்காட யாருமே துணியாத வாறு ஒடுக்கி வைக்கவே ஜெயாவும் - சி.பி.ஐ.யும் விரும்புகின்றன. அதற்காக இது வரை ''புலிகளின் ஆயுதக் கலாச்சாரம்'' என்கிற புரளி கிளப்பி வந்த ஜெயா - வாழப்பாடி - சி.பி.ஐ. கும்பல் இப்போது ஈழ ஆதரவு இயக்கங்களை எல்லாம் ''புலிகளின் ஆதரவு - தேசவிரோத சக்திகள்'' என முத்திரை குத்தி ஒடுக்க முனைந்திருக்கிறது.

பதவிக்காக மாற்றானின் காலையும் நக்கிப் பிழைக்கும் அரசியல் விபச்சாரத் தரகர் குமரி ஆனந்தன் கடந்த செப்.11-ந் தேதி சட்டமன்றத்தில் பெண்ணரசி, வீராங்கனை என்றெல்லாம் ஜெயாவுக்கு அர்ச்சனை செய்துவிட்டு, தனது இனத் துரோக எட்டப்பன் வேலையைத் துவங்கியிருக்கிறார். முன்பு ஈழப்போரில் குதிக்க படகு ஏறிப் போவதாக நாடகமாடி, இந்திராவை இழிவாக ஏசி, தேசியக் கொடியை அவமானப்படுத்தி, தமிழர்களிடையே அரசியல் ஆதாயம் தேடிய இதே குமரி ஆனந்தனுக்கு இப்போது ''தேசியப்பற்று'' பீறிட்டு வேட்டியில் ஒழுகியிருக்கிறது. ஈழ ஆதரவு இயக்கங்களுக்கு எதிராக எதிரிகளிடம் சாடி சொல்லி பிழைப்பு நடத்துவதில் இறங்கியிருக்கிறார்.

''ஆயுதக் கலாச்சாரம் வாழ்க'', ''ராஜீவைக் கொன்றதில் என்ன தவறு?'' ''சோனியா விதவையானால் என்ன?'' என்று ஈழ ஆதரவு சுவரொட்டிகள் ஒட்டப்படுவதாக உடன்கட்டை நாயகி ஜெயாவிடம் அவதூறுகளைப் புளுகி முறையிட்டார் எட்டப்பன் குமரி ஆனந்தன். குமரி ஆனந்தன் போன்ற துரோகிகளின் உடம்பில் ஓடுவது இரத்தமல்ல, சாக்கடைதான். அதை மறந்து விட்டு, ''கொலைப் பட்டியலில் முதல்வரின் பெயர் இருப்பதைக் கேட்டு எங்கள் ரத்தம் கொதிக்கிறது'' என்று குதித்தார் குமரி ஆனந்தன். ஈழ ஆதரவாளர்களது கைகளைக் கட்டி நடுரோட்டில் இழுத்து வரவேண்டும்; வயலில் இருந்து களைகளை அகற்றுவது போல தூக்குத் தண்டனை விதித்து அவர்களை அகற்றவேண்டும் என்று கோரி எதிரிகளை விட குமரி ஆனந்தன் போன்ற துரோகிகளுக்குள்ள பயபக்தியை வெளிப்படுத்தினார்.

அவ்வளவுதான்! உசுப்பி விடப்பட்ட பார்ப்பன - பாசிச ஜெயா, அதிகார போதை தலைக்கேற பேயாட்டம் ஆடிப் பெருங்கூச்சல் போட்டு ஈழ ஆதரவாளர்கள் மீது பாய்ந்து விட்டார். ''விடுதலைப் புலிகளுக்கு ஆதரவு தெரிவித்து, ஈழத்தமிழர்கள் நலன்கள் என்கிற பெயரில் மாநாடுகள், பொதுக்கூட்டங்களில் பங்கேற்றாலோ, ஏற்பாடு செய்தாலோ, அறிவித்தாலோ சுவரொட்டிகள் ஒட்டினாலும் கூட அவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ஏவி தமிழகத்திலும் இந்தியத் துணைக் கண்டத்திலும் இத்தகைய தீய சக்திகளை ஒடுக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்படும்'' என்று கொக்கரித்தார் ஜெயலலிதா. உடனே அவரது உத்தரவின் பேரில் ஈழ ஆதரவு இயக்கத்தினர் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வேலூரில் ஈழ அங்கீகரிப்பு கோரி மாநாடு நடத்த முயன்ற தமிழ்நாடு இளைஞர் பேரவை, மாணவர் பேரவை ஆகிய அமைப்புகளைச் சேர்ந்த 70 பேர் கைது செய்யப்பட்டு மாநாடு தடை செய்யப்பட்டது.

சென்னை - அம்பத்தூரில் ஈழ அகதிகளை வெளியேற்றுவதை எதிர்த்து மாநாடு நடத்த முயன்ற மக்கள் உரிமைக் கழகம், மக்கள் கலாச்சாரக் கழகம், புரட்சிகர இளைஞர் முன்னணி மற்றும் பிற ஈழ ஆதரவு இயக்கத்தினர் 56 பேர் கைது செய்யப்பட்டு மாநாடு தடை செய்யப்பட்டது. இவர்கள் எல்லாம் உடனே விடுதலை செய்யப்பட்டனர். என்றாலும் சட்டசபையில் ஜெயலலிதா கூச்சலைத் தொடர்ந்து மதுரை, திருப்பூர், சித்தோடு ஆகிய இடங்களில் பு.இ.மு.வினரும், காஞ்சியில் தெருமுனைக் கூட்டம் நடத்திய பெரியாரிய - மார்க்சிய பொதுவுட



தமிழகத்திலுள்ள அகதி முகாமில் அவதிப்படும் ஈழ மக்கள்.



'திராவிட' ஆட்சியின் பொற்காலம்: இந்து கோயில்களுக்கு கட்டாய நிதி வசூல்; ஐம்பொன் சிலைக்கு குளுகுளு வசதி.

மைக் கட்சியினர் சிலரும் தேசத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர்; இவை எதிர்த்து பத்திரிக்கையாளர் கூட்டம் நடத்த முயன்ற போது அது தடை செய்யப்பட்டு ம.உ.க. தலைவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அரசியல் சீக்கு ஜெயலலிதா ஆட்சி பீடமேறி மூன்று மாதங்கள் தான் ஆகின்றன. அதற்குள்ளாகவே தான் தமிழ் இனத்துக்கே கொடிய, கேடான எதிரி; தான் அமைத்திருப்பது ஒரு பார்ப்பன - பாசிச அரசு பயங்கரவாத ஆட்சியே என்பதை இந்தச் சொல்லாலும் செயலாலும் உறுதிப்படுத்தி விட்டார்.

சிங்கள இனவெறி அரசுக்கு ஊழியஞ் செய்யும் கைக்கூலியாகி, அதற்காக மத்திய அரசு - சி.பி.ஐ. கூட்டோடு விடுதலைப் புலிகள் ஒழிப்புப் பதிலிப்போர் (PROXY WAR) நடத்திக் கொண்டிருக்கிறார் ஜெயலலிதா. அத்தோடு அதையே ஈழ ஆதரவு இயக்கங்களுக்கும், தமிழகத் தன்னுரிமைக் குழுக்களுக்கும், புரட்சிகர மற்றும் ஜனநாயக அமைப்புகளுக்கும் எதிரான அறிவிக்கப்படாத அவசர நிலைக்கால அடக்குமுறையாக விரிவுபடுத்தி இருக்கிறார்.

ராஜீவ் கொலை விசாரணை துவங்கியதும், ஜெயலலிதா பதவியேற்றதுமே, ''ராஜீவ் கொலை விசாரணை; அரசியல் பழிவாங்கும் முயற்சி'' என்கிற எச்சரிக்கைக் கட்டுரையை புதிய ஜனநாயகம் இதழில் எழுதினோம். ''ராஜீவ் கொலை விசாரணை நீதியான, நேர்மையான முறையில் நடைபெறாது; கொலைக்குக் காரணமானவர்களைக் கண்டுபிடித்துக் தண்டிப்பதோடு அவர்களது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக் கொள்ள மாட்டார்கள்; கொலைக்கு சர்வ தேச, அரசியல் உள்நோக்கம் கற்பிக்கும் முயற்சியில் விசாரணைக் கமிசனைப் பயன்படுத்துவார்கள். அரசியல் எதிரிகளுக்கு எதிராகக் கொலைப்பழி சுமத்துவதைத் தேர்தல் கால அனுதாப அலை எழுப்பி ஆதாயம் தேடிக் கொள்வதோடு நிறுத்த மாட்டார்கள்; சாத்தியமான பலரை ராஜீவ் கொலையில் சம்பந்தப்படுத்தித் தண்டிப்பதோடு, இந்த வழக்கோடு நேரடியாக சட்டப்படி சம்பந்தப்படுத்தாமலேயே பலர் மீது - குறிப்பாக திராவிட இயக்கத்தினர், தமிழ் தேசிய இனவாதக் குழுக்கள், ஜனநாயக மற்றும் புரட்சியாளர்கள் மீது - கொலை சதிக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தி அரசியல் பழிவாங்குதலும் தனியே நடக்கும்; அரசியல் ஆதாயம் கருதிப் பழிவாங்கும் இத்தகைய செயல்கள் பாசிசத் தன்மையுடையன; நியாயமான தேசிய இன இயக்கங்களையும் ஒடுக்கும் நோக்கமுடையன'' என்று இரண்டு மாதங்களுக்கு முன்பே எழுதினோம்.

இதை மெய்ப்பிக்கும் வகையில் மத்திய, மாநில அரசுகள் சி.பி.ஐ. மற்றும் ''கியூ'' பிரிவு உளவுப் படைகளை ஏவிவிட்டுள்ளன. ராஜீவ் கொலைக்காக அமைக்கப்பட்ட விசாரணைக் கமிசன் நீதிபதி வர்மா அக்கொலையில் சர்வதேச சதி பற்றி விசாரிக்க மறுத்துவிட்டார். அவர் மட்டுமல்ல, உச்சநீதி மன்ற நீதிபதிகள் அனைவருமே மறுத்து விட்ட நிலையில், டெல்லி உயர் நீதிமன்றத்தைச் சேர்ந்த இந்திரா விசுவாசி ஜெயின் கமிசன் நியமிக்கப்பட்டுள்ளது.



சிவராசன், சுபா ஆகியோரைப் பிணமாகப் பிடித்த பின்னும் சி.பி.ஐ.யின் சிறப்புப் புலனாய்வுக் குழுவின் புலிவேட்டை நிறுத்தப்படவில்லை. ''சிவராசன், சுபா சாவுக்குக் காரணமானவர்களைப் பழிதீர்க்க புலிகளின் அதிரடிப்படை வந்துள்ளது; கண்ணம்பாடி அணைக்கும், மகாபலீசுவரர் சிலைக்கும் வெடி வைக்கப் போகிறார்கள்; சி.பி.ஐ. சிறப்புப் புலனாய்வுக் குழு அதிகாரிகளைக் கொலை செய்யத் திட்டமிட்டுள்ளனர்; சி.பி.ஐ.யிடம் சிக்கியுள்ளவர்களைக் கொன்று தடயங்களை அழிக்கவோ, அவர்களை மீட்கவோ முயலுகிறார்கள்'' - இப்படி முதலாளித்துவப் பத்திரிகைகளே நம்பமுடியாத வதந்திகளைத் திட்டமிட்டு பரப்பினார்கள். புலி வேட்டையைத் தொடர்வதற்கான முகாந்திரமாக இவை பயன்படுத்தப் படுகின்றன.

ஏற்கனவே சிவராசன், சுபாவைத் தேடுவதாகக் கூறிக்கொண்டு புலிகளின் ஆயுதத் தயாரிப்புகள், செய்தித் தொடர்பு வலைப் பின்னல்களை அறுத்தெறிந்து அழிக்கும் வேலையில் சி.பி.ஐ. மற்றும் ''கியூ'' பிரிவு உளவுப்படைகள் ஈடுபட்டிருந்தன; ஈழப் போரில் காயமடைந்து சிகிச்சை பெற்றுவந்த போராளிகளைக் கூட சிவராசன் கூட்டாளிகள், புதிய அதிரடித் தாக்குதலுக்கு வந்த தற்கொலைப் படையினர் என்று முத்திரை குத்தி வேட்டையாடின. இப்போது சிவராசனுக்கும் பிரபாகரனுக்கும் நேரடித் தொடர்பு இருந்ததாகவும், ராஜீவைக் கொலை செய்யும்படி பிரபாகரனே நேரடி உத்திரவு போட்டதாகவும் ஆதாரங்களை உருவாக்கும் முயற்சியில் சி.பி.ஐ. சிறப்பு புலனாய்வுக் குழு ஈடுபட்டுள்ளது. இதற்காக ஈழப் போராளிகள் மற்றும் அவர்களது ஆதரவாளர்களிடையே பொய் சாட்சியங்களை - 'அப்ரூவர்களை'த் தேடி அலைகிறது.

இதன்மூலம், நேரடியாகப் படைகளை ஈழத்துக்கு அனுப்ப முடியாவிட்டாலும் உளவுப்படைகளை ஏவி பிரபாகரனைப் பிடிப்பது, நாடு கடத்தும்படி இலங்கை அரசிடம் கோருவது, தேவையானால் கூட்டு இராணுவ நடவடிக்கையில் இறங்குவது என்கிற நோக்கில் மத்திய - மாநில அரசுகள் செயல்படுகின்றன. இதற்கு அடித்தளம் அமைக்கும் வகையில் பார்ப்பனப் பத்திரிகைகள் பிரச்சாரம் நடத்துகின்றன. முதல் தடவை இந்திய இராணுவம் நடத்திய ஈழ ஆக்கிரமிப்பு பெருந்தோல்வியிலும் அவமானத்திலும் முடிந்தது; அதோடு இந்திய பார்ப்பன - பாசிச கும்பல் தனது தலைவனையே பறிகொடுத்தது. இரண்டாவது முறை ஈழ ஆக்கிரமிப்புப் படையெடுப்பார்களேயானால் அது நிச்சயம் பெரும் கேலிக் கூத்தாகவே முடியும்.

ஆனாலும் ஆக்கிரமிப்பு - ஆதிக்க - விரிவாக்க ஆசையை இந்திய பார்ப்பன - பாசிச கும்பல் கைவிடவில்லை. அந்த நோக்கத்தோடும், ராஜீவ் கொலைக்குப் பழிவாங்கும் நோக்கத்தோடும் சிங்கள இனவெறி அரசுக்கு நட்பு - நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் புலிகள் ஒழிப்புப் பதிலிப் போரை இந்தியாவில் துவங்கி நடத்துகிறார்கள். இதன் ஒருபகுதியாகவும், இந்தியத் தமிழகத்தில் தலைதூக்கும் தன்னுரிமை மற்றும் ஜனநாயகப் புரட்சிகர இயக்கங்களை அடக்கி ஒடுக்கவும் இப்போது ஈழ ஆதரவு இயக்கங்கள் மீது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் பாய்கிறது.

தமிழ் இன உணர்வு, ஈழ ஆதரவு என்கிற சிறு சாயல் இருந்தால் கூட விட்டு வைப்பதில்லை என்று கங்கணம் கட்டிக் கொண்டு செயல்படுகிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். ஒரு உதாரணத்தைப் பாருங்கள்: பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் முதுகலைப் படிப்புக்குப் பாடநூலாக இருந்தது, அப்துல் ரகுமானின் ''சுட்டுவிரல்'' என்ற கவிதைத் தொகுப்பு. அது புலிகள் ஆதரவு, தேச துரோகமானது என அகற்றப்பட்டது; இதற்காக வரிந்து கட்டிக் கொண்டு பிரச்சாரம் செய்த பார்ப்பன ஏடான தினமலர் இக்கவிதைத் தொகுப்பைத் தடை செய்ய வேண்டும் எனக் கோருகிறது.

இனி முடிவு செய்ய வேண்டியது தமிழ் மக்கள் தாம்!

ஆயுத பேர ஊழல்கள் செய்து நாட்டையே கொள்ளையடிக்கிறார்கள்; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஐ.எம்.எஃப் - உலக வங்கிக்கு நாட்டையே மறு அடகு வைக்கிறார்கள்; நமது மக்களையே கொள்ளையிட்டு சிங்கப்பூரிலே சொத்துச் சேர்க்கிறார்கள்; சுவிஸ் நாட்டில் கள்ளப்பணத்தைக் குவிக்கிறார்கள்; அந்நிய நாடுகளுக்கு உளவு சொல்கிறார்கள்; — இந்தப் பார்ப்பன - பனியா - பாசிசக் கும்பல் தேச விரோதிகளா?

இல்லை, நமது தேசத்தையும், இனத்தையும், மொழியையும், பண்பாட்டையும் நேசிப்பவர்கள்; நமது சகோதர ஈழத் தமிழினத்தை ஆதரிப்பவர்கள் தேசத் துரோகிகளா?

ஈழ ஆதரவாளர்கள், தன்னுரிமை இயக்கத்தவர்களை மட்டுமல்ல, தமிழ் மக்கள் அனைவரையுமே அடிமையாக்கி ஆண்டு விடலாம் என்று பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் எண்ணிவிட்டது. தன்னை எதிர்த்து அம்பலப்படுத்தும் பத்திரிக்கைகள் மீது பாய்கிறது; எதிர்க்கட்சியினரான பண்ருட்டி, திருநாவுக்கரசு, பரிதி இளம்வழுதி ஆகியோரைச் சட்டமன்றத்திலேயே தாக்கு

கிறது. மூன்றாண்டுக்கு முந்தைய வழக்கை, காலாவதியாகிப் போனாலும் பழிதீர்க்கும் ஆத்திரத்துடன் தி.மு.க. பிரமுகர் ராமலிங்கத்தைக் கைது செய்து உள்ளாடையுடன் சிறையில் அடைக்கிறது. ''பறைப்பயலே'' என்று ஏசி பரிதி இளம்வழுதியின் வேட்டியை உருவிக் கொண்டு வெளியே வீசுகிறது. காவல் தெய்வம், இதய தெய்வம் என்று துதிபாடி காலில் விழாதவர்களை எல்லாம் அடக்கி ஒடுக்குகிறது.

மின் கட்டண உயர்வு, ரேஷன் அரிசி விலையேற்றம், பேருந்துக் கட்டண உயர்வு என்று அடுத்தடுத்து பொருளாதாரத் தாக்குதல்களை ஏவிவிடுகிறது; காஞ்சி சங்கர மடத்தின் உத்தரவை ஏற்று கோவில்களைப் பராமரிக்கும் நிதி என்று பார்ப்பனர் வசதி - வாழ்வுக்காக கட்டாய நிதி வசூலிக்கிறது. என்ன செய்தாலும் தனது ஆட்சியை யாரும் அசைக்க முடியாது என்கிற அதிகாரத் திமிரோடு இது பார்ப்பனர் ஆட்சிதான் என்று பார்ப்பனர் சங்கம் தனது பத்திரிக்கையிலே எழுதிக் கொள்ளும் வகையில் வெறியாட்டம் போடுகிறது.

இப்படி ஈழ. இந்தியத் தமிழர்க்கு எதிராக பாசிச ஒடுக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளதை மூடி மறைப்பதற்காகத்தான், தானும் தமிழ்நாட்டு நலனுக்குப் பாடுபடுவதாகப் பாசாங்கு செய்து காவிரி, கச்சத்தீவு போன்ற விவகாரங்களில் பெருங்கூச்சல் போடுகிறது பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல். திராவிட இன - இயக்கத்துக்கான பரம்பரை வாரிசு உரிமை பாராட்டித் தமிழ் மக்களை மோசடி செய்கிறது.

திராவிட, தமிழின உரிமைப் பாரம்பரியத்துக்கு என்றால் பார்ப்பன பாசிச - ஜெயா கும்பலுடன் கடும்போட்டி நடத்தும் கருணாநிதி, வீரமணி, இராமதாசு ஆகியோர் தம் ...மையும், தம் சொத்தையும் பாதிக்காத வகையில் மிகவும் பொதுவான, சாதாரணப் பிரச்சினைகளில் எதிர்ப்பு அறிக்கை, கண்டனத்தோடு பதுங்கிக் கொள்கின்றனர்.

ஈழ ஆதரவு இயக்கங்களுக்கு எதிராக தேசியப் பாதுகாப்புச் சட்டம் பாயும் என்று ...ட்டமன்றத்தில் அ.தி.மு.க. - காங்கிரசு ...சிச கும்பல் விஷம் கக்கிய போது கருணா...தி, இராமதாசு கட்சிகளோ, புலிகளுக்கும் ...ங்களுக்கும் எவ்வித உறவுமில்லை; புலிகளைத் தாங்கள் ஆதரிக்கவும் இல்லை என்று ...ன் புலம்பினார்கள். புலிகளையும் ஈழ ...டுதலையையும் ஆதரிப்பது ஏதோ கிரிமி...ல் குற்றம், தேசத் துரோகம் என்றும் அவ்...று செய்தால் ஓட்டுப் பொறுக்க முடியாது ...ன்றும் ராஜீவ் கொலை வழக்கில் சிக்கிக் ...காள்வோம் என்றும் அஞ்சுகிறார்கள்.

புலிகளுடன் தொடர்புபடுத்தி சி.பி.ஐ. ...ழுத்துக் கொண்டு போய் சித்திரவதை ...ய்யும் தி.க., தி.மு.க. தொண்டர்கள் தம் ...சியினர் இல்லை என அறுத்துக் கொண்டு ...க்கதியாய் கைவிட்டு விடுகின்றனர் கருணாநிதியும், வீரமணியும். பார்ப்பன - ...சிச கும்பலின் இத்தகைய ஒடுக்கு முறை...ளை இருவருமே கண்டுகொள்வதில்லை. ...வகையில் இதற்கெல்லாம் முன்னோடி...க இருந்ததே கருணாநிதியும், வீரமணி...தான். இப்போது ஈழ ஆதரவாளர்களை ...ட்டையாடுவதற்குப் பயன்படுத்தப்படும் ''கியூ''ப் பிரிவு போலீசு உளவுப் படையை உருவாக்கியதே கருணாநிதி ஆட்சியில், அவரேதான்! தனது ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள தஞ்சை தமிழர் தன்னுரிமை மாநாட்டைத் தடைசெய்து, இந்திய இராணுவ அட்டூழியங்கள் பற்றிய புகைப்படக் காட்சியை சூறையாடி, தலைவர்களை கைது செய்ததும் கருணாநிதி அரசுதான்!, பிரிவினைவாதக் குற்றஞ்சாட்டி தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் நகைமுகனைச் சிறையில் அடைத்ததும் கருணாநிதி அரசுதான்! இதையெல்லாம் கண்டு கொள்ளாது, ஒரு வரிகூட எழுதாது கருணாநிதியுடன் ஒத்துழைத்தது வீரமணிதான்!

கருணாநிதியும் வீரமணியும் மட்டுமல்ல, வேழம் என்றும் அரிமா என்றும் வீர நடைக் கவிதைகளும் வெண்பாக்களும் பாடிய சாலையாரும், பெருஞ்சித்திரனாரும், ஆனைமுத்தாரும் ராஜீவ் கொலைக்குப் பிறகு ஓடி ஒளிந்து கொண்டார்கள். இந்தி எதிர்ப்பு போராட்டக் களத்தில் தமிழ் இளைஞர்கள் பலரும் உயிர்பலி கொடுத்த போது, அதற்கும் எங்களுக்கும் சம்பந்தமில்லை என மன்னிப்புக் கோரி வெளிவந்ததும் பின்னர் அத்தியாகிகளின் பெயராலேயே அரசியல் ஆதாயம் தேடிக் கொண்டதும்தான் கருணாநிதிகளின் வரலாறு. அதே போலத்தான் ஈழ விடுதலைப் போர் வெற்றி ஈட்டியபோது வீரப்பரம்பரையின் உரிமை பாராட்டிய இந்தத் தலைவர்கள், இப்போதைய நெருக்கடியின் போது பதுங்கி விட்டார்கள்; எல்லாம் ஓய்ந்தபின் வருவார்கள். ஆதாயம் தேட!

அதுவுமல்லாமல் ஈழ, இந்தியத் தமிழருக்கு எதிரான இந்தப் பார்ப்பன - பாசிச ஒடுக்கு முறையை சமாதான - சட்டவாத வழிகளினால் முறியடிக்க முடியாது; யார் ஆட்சிக்கு வந்தாலும் அதிகாரம் செலுத்தும் பார்ப்பன - பாசிச கும்பலின் ஆதரவாளர்கள் அரசு எந்திரத்திலே இருக்கிறார்கள். அதன் நச்சுப் பிரச்சாரமும், பாசிச ஒடுக்குமுறையும் இதைக் காட்டவில்லையா? ஆகவே கருணாநிதி, வீரமணி போன்ற பிழைப்புவாதிகளை வெறுத்து ஒதுக்கிவிட்டு, புதிய புரட்சிகரத் தலைமையின் கீழ் அணி திரள்வதுதான் பார்ப்பன - பாசிச கும்பலின் ஒடுக்குமுறைக்கு எதிராக எவ்வித சமரசமுமின்றிப் போராடுவதற்கான ஒரே வழி!

இறுதியாக, பார்ப்பன - பாசிச ஜெயா கும்பல் ஈழ, இந்தியத் தமிழர்களுக்கு எதிராகப் போர் பிரகடனம் செய்துள்ளது. தமிழகம் முழுவதும் மனிதவேட்டை நடத்துகிறது. இனியும் இந்தக் கும்பலின் ஆட்சி நீடிக்கக் கூடாது. கருணாநிதி ஆட்சியைக் கவிழ்க்கவும், அதிகாரத்தைப் பிடிக்கவும் பல்வேறு கிரிமினல் சட்டவிரோதச் செயல்களில் ஈடுபட்டது ஜெயலலிதா கும்பல்; தமிழ் மக்கள் அத்தகைய இழிசெயல்களில் இறங்கத் தேவையில்லை. அவற்றுக்கு மாறாக, தமிழகத் தெருக்களில் புரட்சிப் போராட்டங்கள் வெடிக்கட்டும்.

அ.தி.மு.க. - காங்கிரசு துரோகிகள் தமிழ்நாட்டில் நடமாடக் கூடாது; பார்ப்பனப் பிரச்சார ஏடுகள் கிழித்தெறியப்பட வேண்டும். அவர்களின் தலைவி பெங்களூர் மாளிகைக்கோ, ஐதராபாத் பண்ணைக்கோ தலை தெறிக்க ஓடும்வரை தமிழ் மக்கள் ஓயக்கூடாது.

● ஆர்.கே.




## அறிவிப்பு

**அன்பார்ந்த வாசகத் தோழர்களே,**

*போதிய இடமின்மையின் காரணமாக இவ்விதழில் கேள்வி -பதில் பகுதி இடம் பெறவில்லை. அடுத்த இதழிலிருந்து தொடர்ந்து வெளிவரும். உங்களது சந்தேகங்கள், கேள்விகளை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.*

*— ஆசிரியர் குழு*